செ.வெ. எண் : 450 நாள் : 18.7.2007.

**செய்தி வெளியீடு**

***சென்னை 4, தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்தல், புதுப்பித்தல் தொடர்பாக***

சென்னை, சாந்தோமில் செயல்பட்டு வரும் தொழில் மற்றும் செயல்வேலைவாய்ப்பு அலுவலகத்தில் அனைத்து மாவட்டங்களிலிலிருந்தும் புதியதாகப் பதிவு செய்ய விரும்பும் முதுகலைப் பட்டதாரிகள் மற்றும் தொழில்—செயல் கல்வித் தகுதியினர் அந்தந்த மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் மூலமாகப் பதிவுசெய்து கொள்ளலாம். www.employment.tn.gov.in என்ற இணையதள முகவரியில் உள்ள படிவத்தின் நகலினை எடுத்து உரிய விவரங்களைப் பூர்த்தி செய்து, சான்றிதழ்களின் நகல்களை இணைத்து பதிவஞ்சலில் தொழில் செயல் வேலைவாய்ப்பு அலுவலகம், சென்னை—4—க்கு அனுப்பலாம்.

2. கூடுதல் கல்வித் தகுதிகளைப் பதிவுசெய்ய விரும்பும் மனுதாரர்கள் அடையாள அட்டையின் நகலுடன் கூடுதல் கல்வித் தகுதிக்குரிய சான்றிதழ்களின் புகைப்பட நகலை இணைத்து பதிவஞ்சல்மூலம் தொழில் மற்றும் செயல் வேலைவாய்ப்பு அலுவலகத்திற்கு அனுப்பி வைத்துப் பதியலாம்.

3.புதுப்பித்தல் செய்ய வேண்டிய மனுதாரர்கள் தங்களது புதுப்பித்தலை வலையதளத்தைப் பயன்படுத்தி புதுப்பித்துக் கொள்ளலாம்.

இந்த வசதியை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் மனுதாரர்கள் சென்னைக்கு வருவதைத் தவிர்க்கலாம். சென்னை மற்றும் சென்னைக்கருகில் உள்ள மாவட்டங்களைச் சார்ந்தவர்கள் நேரில் வந்து பதிவு செய்து கொள்ளலாம்.

********

**வெளியீடு** : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை -9.